உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி தலைமையில் இட ஒதுக்கீட்டு போராட்டத்தில் உயிர் நீத்த 21 தியாகிகளுக்கான மணிமண்டபம் மற்றும் முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமிக்கு மணி மண்டபம் ஆகியவை அமைப்பதற்காக விழுப்புரம் ஆவின் பின்புறம் (திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலை அருகில்) உள்ள இடத்தினை நேரில் ஆய்வு செய்தார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன் , மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில விவசாய தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் புதுசத்திரம் ஊராட்சியில் கம்பிளிநாயக்கன்பட்டி,

புதுசத்திரத்தில் ரூ.22லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி மையங்கள்!

ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி திறந்து வைத்தார்!

ஆத்தூர், ஜூலை 2 - ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் புதுசத்திரம் ஊராட்சியில் கம்பிளிநாயக்கன்பட்டி மற்றும் புதுசத்திரத்தில் ரூ.22லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி மையங்களை ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி திறந்து வைத்தார். குழந்தைகள் முதல் மாணவர்கள் வரை பாதுகாப்பான கல்வியை தருவது திமுக ஆட்சியே என ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் புதுசத்திரம் ஊhட்சிக்கு உட்பட்ட கம்பிளிநாயக்கன்பட்டியில் ரூ.11லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையம் மற்றும் புதுசத்திரத்தில் ரூ.10.93ட்சம் மதிப்பில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையம் மற்றும் அரண்மனையூரில் ரூ.7லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பல்நோக்கு மைய கட்டிடங்கள் திறப்புவிழா நடைபெற்றது. விழாவிற்கு ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவரும், தெற்கு ஒன்றிய திமுக செயலாளருமான ப.க.சிவகுருசாமி தலைமை தாங்கினார். ஊரகவளர்ச்சி முகமை மாவட்ட திட்ட இயக்குநர் திலகவதி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, ஒன்றிய துணைப் பெருந்தலைவர் ராஜேஸ்வரி தமிழ்ச்செல்வன், புதுசத்திரம் ஊராட்சிமன்ற தலைவர் வி.லெட்சுமி, ஒன்றியகுழு உறுப்பினர்கள் விவேகானந்தன், நாகலெட்சுமி ரமேஷ், காளீஸ்வரி மலைச்சாமி, மணிகண்டன், கூட்டுறவு வளர்ச்சி அலுவலர்கள் சக்கரவர்த்தி மணிமாறன், கனேசன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் அங்கன்வாடி மையங்களை திறந்து வைத்த குத்துவிளக்கு எற்றிய பின்பு அங்குள்ள மழலையர்களுக்கு இனிப்புகளை வழங்கி அவர்களை வாழ்த்திய ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி பொதுமக்கள் மத்தியில் பேசும் போது திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்த பின்பு இரண்டு திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் முழுமையாக செயல்படுத்த உள்ளது. குறிப்பாக புதுசத்திரம் ஊராட்சியில் 9இடங்களில் மேல்நிலை தண்ணீர் தொட்டி கட்டப்பட உள்ளது.

புதுசத்திரத்திற்கு மட்டும் தனியாக 60ஆயிரம் லிட்டர் கொள்ளவு உள்ள மேல்நிலை தண்ணீர் தொட்டி கட்டஉள்ளோம். சென்ற அதிமுக ஆட்சியின் போது காவிரி கூட்டுக்குடிநீர் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்கு முழுமையாக கிடைக்ககூடாது என்ற எண்ணத்தில் தேவையில்லாத இடத்தில் எல்லாம் காவிரி நீரை கொண்டு சென்றார்கள் ஆனால் இப்போது முழுமையாக காவிரி கூட்டுக்குடிநீர்; கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் தினசரி குடிதண்ணீரை பெரும் நிலைமை உருவாகியுள்ளது. செப்டம்பர் மாதம் 1ம் தேதி முதல் குடும்ப தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் திட்ட பணிகள் முழுமையாக நடைபெற்று ஊராட்சிமன்ற தலைவர்கள் அந்தந்த ஊராட்சிகளில் செப்டம்பர் 15 முதல் வழங்க உள்ளார்கள்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவுபடி குக்கிராமங்களில் கூட தரமான தார் சாலைகள் அமைக்கப்பட்டு வருகிறது. இது போல கிராமங்களை நகர்களுடன் இணைக்கும் தார்சாலைகளுக்கு முக்கியத்துவம் அளித்து தார் சாலை அமைக்கப்படுவதால் கிராம விவசாயிகள் தங்களின் விளை பொருட்களை எளிதாக நகரங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யகூடிய நிலைமை உருவாகியுள்ளது.

நிகழ்ச்சியில் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் பூங்கொடி, ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலக தாசில்தார் நவநீதகிருஷ்ணன், ரெடடியார்சத்திரம் ஒன்றிய துணைப்பெருந்தலைவர் ராஜேஸ்வரி தமிழ்ச்செல்வன், மாவட்ட கவுன்சிலர் சுப்புலெட்சுமி சண்முகம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மலரவண், கிருஷ்ணன், குழந்தைகள் வளர்ச்சி திட்ட வட்டார அலுவலர் மெர்லின் அண்ணமலர், வட்டார காங்கிரஸ் தலைவர் வி. முருகேசன், புதுசத்திரம் ஊராட்சிமன்ற துணைத்தலைவர் கிருஷ்ணவேனி காளியப்பன், மாவட்ட பிரதிநிதி எல்லை ராமகிருஷ்ணன்,

ஆத்தூர் சட்டமன்ற முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் செல்வம், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ரமேஷ், தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், டி.புதுப்பட்டி திமுக கிளைச் செயலாளர் உதயக்குமார், புதுசத்திரம் ஊராட்சிமன்ற வார்டு உறுப்பினர்கள் பார்வதி, செல்வராணி, வெள்ளைம்மாள், அனிதா, காந்திமதி, சண்முகதாய், ஊராட்சி செயலாளர் செந்தில்முருகன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிறைவாக ஊராட்சி மன்ற தலைவர் லெட்சுமி நன்றி கூறினார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு இந்து சமய அறநிலையத்துறையில் பணியாற்றி பணிகாலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் விதமாக திருமதி எஸ். சுஜாதா, எஸ்.பிரதீப் கிருஷ்ணா,வீ.கார்த்திக், பி.அருண்பிரகாஷ் ஆகியோருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் சார்பில்

மாமல்லபுரத்தில் 6.79 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய பேருந்து நிலைய இடம்!

அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் - பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, ஜூலை 2- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (30.6.2023) செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்படவுள்ள புதிய பேருந்து நிலையத்திற்கான இடத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்படவுள்ள புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்குண்டான அறிவிப்பு கடந்த 200611 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிகாலத்தில் இன்றைய தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டம் கடந்த ஆட்சிகாலத்தில் கிடப்பில் போடப்பட்டு, தற்போது இந்த திட்டத்தை கொண்டுவரவேண்டுமென்று முனைப்பு காட்டி இந்த திட்டத்தை இந்த ஆண்டிலே செயல்படுத்த வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்துகிறார்.

மாமல்லபுரத்தில் அமையவிருக்கின்ற இந்த பேருந்து நிலையத்தில் 6.79 ஏக்கர் நிலப்பரப்பில் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட சதுரடியில் 50 பேருந்துகள் ஒரே நேரத்தில் நிற்கக் கூடிய அளவிற்கு வடிவமைக்கப்படவிருக்கிறது. இந்த பேருந்து நிலையம் வரபெற்றால் மாமல்லபுரத்தில் ஏற்கனவே இருக்கின்ற பழைய பேருந்து நிலையத்தில் போக்குவரத்து நெரிசல் கட்டுப்படுத்தப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மாமல்லபுரத்தில் தற்போதுள்ள பேருந்து நிலையம் 0.31 ஏக்கர் பரப்பளவில், 10 பேருந்துகளை நிறுத்தும் திறன் கொண்டது. சென்னைப் பெருநகரப் போக்குவரத்துக் கழகம் (MTC) மற்றும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (TNSTC விழுப்புரம் மண்டலம்) மாமல்லபுரத்தில் இருக்கும் பேருந்து நிலையத்தில் இருந்து திருத்தணி, தாம்பரம், செங்கல்பட்டு, கல்பாக்கம், திருப்போரூர், கோயம்பேடு மற்றும் திருவான்மியூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்குத் தங்கள் பேருந்துகளை இயக்குகின்றன. தற்போதுள்ள பேருந்து நிலையம் உள்ள இடத்தில் போதிய இடவசதி இல்லாததால், கிழக்கு கடற்கரை சாலை மற்றும் திருக்கழுக்குன்றம் சாலை அருகாமையில் புதிய பேருந்து நிலையம் அமைக்க முன்மொழியப்பட்டது.

புதிதாக அமையவிருக்கின்ற இந்தப் பேருந்து நிலையத்தில் முன் பதிவு மையம், தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம், சுற்றுலா தகவல் மையம், மருந்தகம், தாய்மார்கள் பாலூட்டும் அறை, பணியாளர்கள் தங்கும் விடுதி, பயணிகள் ஓய்விடம், வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட வசதிகளைக் கொண்டதாக அமையும். ஆகவே இந்த பேருந்து நிலையத்தை விரைவாக இந்த பகுதியில் கொண்டு வருவதற்குண்டான அனைத்து மேம்பாட்டு பணிகளையும் விரைவுபடுத்த திட்டமிட்டிருக்கின்றோம். இதோடு மட்டுமல்லாமல் கிளாம்பாக்கம், குத்தம்பாக்கம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய பகுதிகளில் புதிய பேருந்து நிலையங்களும், முடிச்சூர் பகுதியில் ஆம்னி பேருந்துகள் நிறுத்துவதற்குண்டான பேருந்து நிலையமும் அமைப்பதற்குண்டான திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த ஆட்சி காலத்தில், புதிய பேருந்து நிலையங்களும் ஏற்கனவே தொடங்கப்பட்டு பணியில் மந்தமாக இருந்த பேருந்து நிலையங்களையும் விரைவுபடுத்துகின்ற பணிகளையும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மாமல்லபுரத்தை துணைக்கோள் நகரமாக்கும் பணியும் நடைபெற்று கொண்டிருப்பதாகவும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர. ராகுல்நாத், திருப்போரூர் ஒன்றிய குழுத் தலைவர் இதயவர்மன், திருப்போரூர் வேளாண்மை ஆத்மா குழுத்தலைவர் பையனூர் சேகர், மாமல்லபுரம் பேரூராட்சித் தலைவர் திருமதி. வளர்மதி, தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ். ருத்ரமூர்த்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

சென்னை மாநகராட்சி 168-வது வார்டில்

ரூ.4 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர் கட்டமைப்புகள் பணி!

மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 2 . சென்னை மாநகராட்சி 168-வது வார்டில் ரூ. 4 கோடி மதிப்பீட்டில் கழிவு நீர் கட்டமைக்கும் பணியினை மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ் தொடங்கி வைத்தார்

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 13 வார்டு 168ல், 30.6.2023 அன்று சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர கற்று வாரியம் சார்பில், சென்னை நதிகள் புனரமைப்பு அறக்கட்டளை (CRRT) மூலமாக ரூ.4 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ள இருக்கும் ஆலந்தூர் சாலை முதல் கிண்டி தொழிற்பேட்டை சாலை வரை விடுபட்ட கழிவுநீர் கட்டமைப்புகள் அமைக்கும் பணிகளும், பூமகள் மெயின்ரோடு முதல் பாலாஜி நகர் மெயின் ரோடு வரை கழிவுநீர் உந்து குழாய் மாற்றியமைக்கும் பணிகளையும், 13வது மண்டல குழு தலைவர் இரா. துரைராஜ் தொடங்கி வைத்தார்.

168வது வார்டு மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் குடிநீர் வாரிய செயற் பொறியாளர், உதவி பொறியாளர் உள்ளிட்ட அதிகாரிகள், மற்றும் 168வது வட்ட செயலாளர்நா.ராதாகிருஷ்ணன், மாவட்டப் பிரதிநிதிகள் டி.வி.நரசிம்மன், ச.சேகர் மற்றும் கே.எஸ்.பாபு உள்ளிட்ட அணிகளின் நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

170-வது வட்ட மாவட்டப் பிரதிநிதி

என்.பாபு தாயார் என்.சரோஜா அம்மாள் மறைவு!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் - மு.மகேஷ்குமார் - இரா.துரைராஜ் அஞ்சலி!

சென்னை, ஜூலை 2 - சைதை கிழக்குப் பகுதி 170-வது வட்டக் கழகத்தைச் சேர்ந்த மாவட்டப் பிரதிநிதி என்.பாபுவின் தாயாரும் நடராஜனின் துணைவியாருமான திருமதி. என்.சரோஜா அம்மாள் அவர்கள் (வயது 79) நேற்று (01.07.2023 சனிக்கிழமை) காலை 11.30 மணி அளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்தும், மாவட்டக் கழகச் செயலாளரும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன், சைதை கிழக்கு பகுதி செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் இரா. துரைராஜ், மாநகர துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மேலும் வே. ஆனந்தன் எம்.சி., வட்டச் செயலாளர்கள் கோட்டூர்புரம் க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், பகுதி துணைச் செயலாளர் ஆர்.ராஜ்குமார், மாவட்டப் பிரதிநிதிகள் எஸ்.ஜெ.. சலாம், எஸ்..ரவி,மற்றும் தாழம்பூர் ஏகாம்பரம், ஏ.கே. சண்முகம், இரா. ஜார்ஜ், எம்.குமார், சி.எல். ஆர்.ஐ. பழனி, பாபூமிநாதன், க.விஜி, எஸ்..தாமு, ஜி.பழனி, ஏ.கர்ணா, டி. ராஜா, கே.கேசவன், யுவராஜ், ஜி.குமார், ஏ.கே.என். உதயா, மு.மகி, மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (02.07.2023 - ஞாயிறு) பிற்பகல் 2.00 மணியளவில் கோட்டூர் அண்ணா தெருவில் உள்ள அன்னாரது இல்லத்திலிருந்து சென்னை85, கோட்டூர், ஏரிக்கரை சாலை, மின் மயானத்தில் இறுதி ஊர்வலம் நடைபெறுகிறது.



சென்னை, கோடம்பாக்கத்தில் நடைபெற்ற முன்னாள் தென் சென்னை மாவட்ட துணைச் செயலாளர் சா. தேவராசு – திருமதி. தே.நீலாவதியின் மணிவிழாவில் தியாகராயர் நகர் கிழக்கு பகுதிச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஜெ.கருணாநிதி தலைமையேற்க மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை, மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன் முன்னிலை வகிக்க தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் மயிலை த.வேலு வாழ்த்து தெரிவித்தார். இதில் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன், ந.மோ.முரளி வரவேற்றனர். கே.எஸ்.வெல்டிங்ராஜா, ராஜா அன்பழகன் எம்.சி., புலியூர் டி.மோஸஸ், பி.எஸ்.சண்முகநாதன், க.சந்துரு, கோ.சு.மணி, மாம்பலம் ஆ.சந்திரசேகர், கார்த்திகா பாஸ்கர் எம்.சி., பி.மாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

‘தடாலடியும் அந்தர் பல்டியும்’

ஆளுநருக்கு மக்கள் மன்றம் தக்க பாடம் புகட்டும்!

‘தீக்கதிர்’ எச்சரிக்கை!

சென்னை, ஜூலை, 2- தமிழ்நாடு அமைச்சர் செந்தில் பாலாஜி பதவி நீக்கம் தொடர்பான செய்தியில் ஆளுநரின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது. அதில் ஆளுநரின் நடவடிக்கை ‘தடாலடியும் அந்தர் பல்டி’யுமாக உள்ளது என்றும் ஆளுநருக்கு மக்கள் மன்றம் தக்க பாடம் புகட்டும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாடு அமைச்சர் செந்தில் பாலாஜியை பதவி நீக்கம் செய்வதாக அதிரடியாக அறிவித்த தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, இரவோடு இரவாக தனது முடிவை நிறுத்தி வைப்பதாக அறிவித்தார். அரசியல் சாசனத்திற்கு விரோதமான தனது முடிவு நீதிமன்றத்தால் ரத்து செய்யப்படக்கூடும் என்று அவரது மூளைக்கு தாமதமாகத் தான் தெரிந்துள்ளது.

அமலாக்கத்துறை வழக்கைச் சந்தித்து வரும் செந்தில் பாலாஜியை மாநில அமைச்சரவையில் இருந்து நீக்கி ஆளுநர் உத்தரவிட்டுள்ளதாகவியாழக்கிழமை மாலை ஆளுநர் மாளிகை அறிவிப்பு வெளியிட்டது. இதற்கு தி.மு.க. மற்றும் அதன் தோழமை கட்சிகளும் அரசியல் சாசனம் குறித்து நன்கு அறிந்த சட்ட நிபுணர்களும் முன்னாள் நீதிபதிகளும் கடும் கண்டனம் தெரிவித்தனர். இதனால் தனது முடிவை ஆளுநர் மாற்றிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 154, 163, 164 ஆகிய பிரிவுகள் தமக்கு அளிக்கும் அதிகாரத்தின் படி, செந்தில் பாலாஜியை அமைச்சரவையிலிருந்து

தீக்கதிர்

2023 ஜூலை 01 சனிக்கிழமை

தடாலடியும் அந்தர் பல்டியும்

தமிழ்நாடு அமைச்சர் செந்தில் பாலாஜியை பதவி நீக்கம் செய்வதாக அதிரடியாக அறிவித்த தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, இரவோடு இரவாக தனது முடிவை நிறுத்திவைப்பதாக அறிவித்தார். அரசியல் சாசனத்திற்கு விரோதமான தனது முடிவு நீதிமன்றத்தால் ரத்து செய்யப்படக்கூடும் என்று அவரது மூளைக்கு தாமதமாகத்தான் தெரிந்துள்ளது.

அமலாக்கத்துறை வழக்கைச் சந்தித்து வரும் செந்தில் பாலாஜியை மாநில அமைச்சரவையில் இருந்து நீக்கி ஆளுநர் உத்தரவிட்டுள்ளதாக வியாழக்கிழமை மாலை ஆளுநர் மாளிகை அறிவிப்பு வெளியிட்டது. இதற்கு தி.மு.க. மற்றும் அதன் தோழமை கட்சிகளும் அரசியல் சாசனம்

உடனடியாக நீக்கி உத்தரவிடுவதாக ஆளுநர் கூறியிருந்தார். ஒரு அமைச்சரை நியமிப்பது அவரை நீக்குவது என்பது முற்றிலும் முதலமைச்சரின் தனிப்பட்ட அதிகாரத்திற்கு உட்பட்டது. முதல்வர் பரிந்துரையின் பேரில் தான் ஒருவரை அமைச்சராக ஆளுநர் நியமிக்கமுடியும். அவரை நீக்குவது என்றாலும் முதல்வர் பரிந்துரை செய்தால் தான் முடியும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு அரசியல் சாசனம் வழங்கியுள்ள பாதுகாப்பு இது.

செந்தில் பாலாஜி விவகாரம் குறித்து அட்டர்னி ஜெனரலின் ஆலோசனையைக் கேட்கப்போவதாக ஆளுநர் அறிவித்திருக்கிறார். செந்தில் பாலாஜியை நீக்கும் முன்பு ஏன் இந்த யோசனை அவருக்கு வரவில்லை. மத்திய உள்துறை அமைச்சகம் அறிவுறுத்திய பிறகே இவ்வாறு அவர் கூறியிருக்கிறார்.

ஒருவர் மீது விசாரணை நடப்பதாலோ, நீதி மன்றத்தில் வழக்கு நடப்பதாலோ அந்த அமைச்சரை நீக்கச் சட்டத்தில் இடம் கிடையாது. ஒரு வழக்கில் குற்றவாளி என்று தீர்ப்பு வந்த பிறகே, அதிலும் நீதிமன்றத்தால் 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றால்தான் அமைச்சரையோ அல்லது அது போன்ற வேறு அரசு பதவிகள் வகிப்போரையோ நீக்க முடியும். இவை அனைத்தும் தெரிந்தும் வேண்டுமென்றே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுடன் ஆளுநர் ரவி தொடர்ந்து மோதல் போக்கை கடைப்பிடித்து வருகிறார்.

பல்கலைக்கழக துணை வேந்தர்கள் நியமனம், பொதுமக்கள் நலன் சார்ந்த மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலதாமதம் செய்வது, என தொடர்ந்து தமிழ்நாட்டு மக்களுக்கும், மாநில வளர்ச்சிக்கும், தமிழ்மொழிக்கும் எதிராக ஆளுநர் ரவி செயல்பட்டால் அவருக்கு மக்கள் மன்றம் தக்கபாடம் புகட்டும்.

இவ்வாறு ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் ஆளுநரை எச்சரித்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்ட மன்ற தொகுதிகுட்பட்ட திருவேற்காடு நகராட்சி மேல் அயனம்பாக்கத்தில் அதிமுக ஆட்சியில் நிருத்தி வைக்கப்பட்ட வழி தடம் 20P. அரசு பேருந்தைபொதுமக்களின்கோரிக்கையைஏற்று மீண்டும் அதே வழி தடத்தில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளருமான ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ துவக்கி வைத்தார். அருகில் நகர மன்றத் தலைவர் என்.இ.கே.மூர்த்தி, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், அதிகாரிகள் அன்பு ஆபிரகாம், ஜஹாங்கிர்பாஷா, அ.பு.குமார், ஆல்பர்ட் அருள் ராஜ், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், மாவட்டநிர்வாகிகள் எஸ். ஜெயபாலன், ஜி.ராஜேந்திரன், ஏ.ஜெ.பவுல், வார்டு கவுன்சிலர் பி.பிரதானம், மற்றும் நிர்வாகிகள் கவுன்சிலர்கள் எஸ்.சங்கர், கோலடி ஜெ.சரவணன், அ.க.நடராஜ், தெய்வசிகாமணி, துரைகோபால்,செல்லதுரை, கே.பி.எஸ். சுதாகர், பரிசமுத்து, இளையராஜா,என்.ராஜி, நாராயணன், நரேஷ், அமலேஸ்வரி, கே.பெருமாள், மோகன் தாஸ் உள்பட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.